தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

Monday, November 18, 2013

# மருத்துவமனைகளில் பாதுகாப்பு நடைமுறை அவசியம்

## கருத்தரங்கில் நிபுணர்கள் வலியுறுத்தல்

சென்னை, நவ. 16–

''மருத்துவமனைகள், விதி முறைப்படி பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுவதும், ஆவணங்களை முறையாக பராமரிப்பதும் அவசியம்,'' என, சங்கர நேத்ராலயா அகடமி கருத்தரங்கில், தர நிர்ணயத் துறைத் தலைவர், ஷியாமளா செல்வராஜ் தெரிவித்தார்.

**சிறப்பு கருத்தரங்கு**

சென்னை, சங்கர நேத்ராலயா அகடமி சார்பில், 'மருத்துவ மனைகளுக்கான அங்கீகாரம்' என்ற தலைப்பிலான, இரண்டு நாள் கருத்தரங்கம், சென்னை, நுங்கம்பாக்கம் சங்கரநேத்ராலயா வளாகத்தில் நேற்று துவங்கியது.

கருத்தரங்கைத் துவக்கி வைத்து, மருத்துவமனையின் உதவி பொது மேலாளரும், தர நிர்ணயத்துறைத் தலைவருமான ஷியாமளா செல்வராஜ் பேசியதாவது:

சர்வதேச அரங்கில், இந்திய சுகாதாரத் துறை முக்கிய இடம் வகிக்கிறது. சேவையும், தரமும் நாள்தோறும் மேம்பட்டு வருகிறது. இந்தியா மருத்துவம் சுற்றுலாத்தலமாக மாறியதால், பல நாட்டினரும் சிகிச்சைக்கு வருகின்றனர். அதற்கேற்ப, அறிவியல் பூர்வமான தேவைகளை பூர்த்தி செய்வது அவசியம்.

இதைக் கருத்தில் கொண்டு, 35 ஆண்டு அனுபவம் கொண்டுள்ள சங்கர நேத்ராலயா அகடமி, முக்கியத்துவம் வாய்ந்த கருத்தரங்குகளை நடத்தி வருகிறது.

**பதிவேடு பராமரிப்பு**

ஆபரேஷன் தியேட்டரை தொற்று பரவாத வகையில் பராமரித்தல், மருத்துவ கழிவுகளை தரம் பிரித்து அகற்றுதல், சிகிச்சை குறித்த பதிவேடுகள் முறையாக பராமப்பதும் அவசியம்.

மருத்துவமனைகளுக்கான அங்கீகாரம் வழங்கும் அமைப்பு, பன்னாட்டு தர நிர்ணய அமைப்புகளின் நிபந்தனைகள், அதைப் பெற மருத்துவமனைகள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய, கருத்தரங்கம் உதவும்.

இவ்வாறு, அவர் பேசினார்.

இதைத்தொடர்ந்து தர மேம்பாடு; அங்கீகாரம் பெறுவதன் அவசியம்; பிற நாடுகளில் உள்ள அங்கீகார மதிப்பீடு; மருத்துவ தணிக்கை, தொற்று தடுப்பு பாதுகாப்பு முறைகள் குறித்து டாக்டர்கள் நிர்மல் பிரடெரிக், சுப்ரமணியன், தர நிர்ணய நிபுணர்கள் ராமகிருஷ்ணன், நவீன்சுக் உள்ளிட்டோர் விளக்கினர்.

அகடமியின் கல்வி அதிகாரி மகாலிங்கம் மற்றும் நாட்டின் பல்வேறு மருத்துவமனைகளில் இருந்தும், 100க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும், இதில் பங்கேற்றனர்.




சென்னை, 'சங்கர நேத்ராலயா அகடமி'யில் நடந்த கருத்தரங்கில், சிறப்புரை நிகழ்த்திய, சங்கர நேத்ராலயா ஒட்டுமொத்த தர நிர்வாகத்தின் குருவான, டாக்டர் டி.வி.சுப்ரமணியனுக்கு, மருத்துவமனையின் இயக்குனரும், விட்டிரியோ ரெட்டினல் பிரிவின் தலைவருமான, டாக்டர் தருண் சர்மா, நினைவு பரிசு வழங்கினார்.

THE NEW INDIAN EXPRESS
Tuesday, November 19, 2013

# Seminar throws light on hospital accreditation


Dr T V Subramaniam

The Sankara Nethralaya Academy conducted a two-day seminar on 'Accreditation for Hospitals' this weekend. Several healthcare professionals from Tamil Nadu, Andhra Pradesh, Kerala and Karnataka participated in this seminar.

Speaking at the inaugural session, Dr T V Subramaniam, Professor Emeritus – IIFMR Chennai & IIM Ahmedabad, stressed the importance of quality accreditation and gave an overview of accreditation in other countries. "If all standards are ensured in critical areas, then quality can be assured," he said. He also added that one of the reasons for defects in healthcare is non-standardization of procedures and products.

The Sankara Nethralaya Academy had a lineup of eminent personalities from the field of accreditation and healthcare to deliver lectures during the course of the weekend. Speakers included P Ilango, expert advisor, Accreditation, Tamil Nadu Health Systems Project (TNHSP), Government of Tamil Nadu; Nirmal Fredrick, lead auditor for NABH and CS Ramakrishnan, chief operating officer, ACME Consulting.

Participants who attended the seminar included hospital administrators, doctors, nurses, quality assurance members and students. "This seminar is focused on the challenges faced by hospitals in implementing NABH standards and would be an eye-opener to people involved in the healthcare industry," said Mahalingam, organising secretary, during the inauguration.

The accreditation seminar covered the entire gamut of quality, workflow processes and practices, including minute details like employee educational credentials imperative for accreditation by prestigious certifying bodies, both national and international.

http://newindianexpress.com/cities/chennai/Seminar-throws-light-on-hospital-accreditation/2013/11/19/article1898003.ece

THE TIMES OF INDIA
Tuesday, November 19, 2013

**Healthcare Convention held at Sankara Nethralaya:**

The Sankara Nethralaya Academy conducted a two day convention on accreditation for hospitals at the Sankara Nethralaya on November 15 and 16. The Seminar focused on the need for quality accreditation for healthcare institutions in an increasingly competitive healthcare market.